# பெரியாழ்வார் திருமொழி 5-4
## சென்னியோங்கு

(எம்பெருமான் தமது திருவுள்ளத்திற் புகுந்தமையால் ஆழ்வார் தாம் பெற்ற நன்மைகளைக் கூறி உகத்தல்)

463 * சென்னியோங்கு * தண் திருவேங்கடம் உடையாய் * உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ * தாமோதரா சதிரா **
என்னையும் என் உடைமையையும் * உன் சக்கரப் பொறி
ஒற்றிக் கொண்டு *
நின் அருளே புரிந்திருந்தேன் * இனி என் திருக் குறிப்பே (1)

464 பறவையேறு பரம்புருடா * நீ என்னைக் கைக்கொண்ட பின் *
பிறவி என்னும் கடலும் வற்றிப் * பெரும்பதம் ஆகின்றதால் **
இறவு செய்யும் பாவக்காடு * தீக்கொளீ இவேகின்றதால் *
அறிவை என்னும் அமுதவாறு * தலைப் பற்றி வாய்க்
கொண்டதே (2)

465 எம்மனா என் குல தெய்வமே * என்னுடை நாயகனே *
நின்னுளேனாய்ப் பெற்ற நன்மை * இவ்வுலகினில் ஆர்
பெறுவார் **
நம்மன் போலே வீழ்த்தமுக்கும் * நாட்டிலுள்ள பாவம்
எல்லாம் *
சும்மெனாதே கைவிட்டோடித் * தூறுகள் பாய்ந்தனவே (3)

466 கடல் கடைந்து அமுதம் கொண்டு * கலசத்தை நிறைத்தாற்
போல் *
உடலுருகி வாய் திறந்து * மடுத்து உன்னை நிறைத்துக்
கொண்டேன் **
கொடுமை செய்யும் கூற்றமும் * என் கோலாடி குறுகப்
பெறா *
தடவரைத் தோள் சக்கரபாணீ * சார்ங்கவிற் சேவகனே (4)

467 பொன்னைக் கொண்டு உரைகல் மீதே * நிறமெழ உரைத்தாற்
போல் *
உன்னைக் கொண்டு என் நாவகம்பால் * மாற்றின்றி உரைத்துக்
கொண்டேன் **
உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன் * என்னையும் உன்னில்
இட்டேன் *
என்னப்பா என் இருடீகேசா * என்னுயிர்க் காவலனே (5)

468 உன்னுடைய விக்கிரமம் * ஒன்றொழியாமல் எல்லாம் *
என்னுடைய நெஞ்சகம் பால் * சுவர் வழி எழுதிக்
கொண்டேன் **
மன்னடங்க மழு வலங்கைக் கொண்ட * இராம நம்பீ *
என்னிடை வந்து எம்பெருமான் * இனி எங்குப் போகின்றதே (6)

469 * பருப்பதத்துக் கயல் பொறித்த * பாண்டியர் குலபதி போல் *
திருப்பொலிந்த சேவடி * என் சென்னியின் மேல் பொறித்தாய் **
மருப்பொசித்தாய் மல்லடர்த்தாய் * என்றென்று உன் வாசகமே *
உருப்பொலிந்த நாவினேனை * உனக்கு உரித்தாகினையே (7)

470 அனந்தன் பாலும் கருடன் பாலும் * ஐது நொய்தாக வைத்து *
என்
மனம் தனுள்ளே வந்து வைகி * வாழச் செய்தாய் எம்பிரான் **
நினைந்து என்னுள்ளே நின்று நெக்குக் * கண்கள்
அசும்பொழுக *
நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன் * நேமி நெடியவனே (8)

471 பனிக் கடலில் பள்ளிகோளைப் * பழக விட்டு * ஓடி வந்து என்
மனக் கடலில் வாழ வல்ல * மாய மணாள நம்பீ **
தனிக் கடலே தனிச் சுடரே * தனி உலகே என்றென்று *
உனக்கிடமாய் இருக்க * என்னை உனக்கு உரித்தாக்கினையே (9)

472 * தடவரைவாய் மிளிர்ந்து மின்னும் * தவள நெடுங்கொடி
போல் *
சுடரொளியாய் நெஞ்சினுள்ளே * தோன்றும் என் சோதி
நம்பி **
வடதடமும் வைகுந்தமும் * மதிள் துவராபதியும் *
இடவகைகள் இகழ்ந்திட்டு * என் பால் இடவகை
கொண்டனையே (10)

473 * வேயர் தங்கள் குலத்துதித்த * விட்டுசித்தன் மனத்தே *
கோயில் கொண்ட கோவலனைக் * கொழுங்குளிர் முகில்
வண்ணனை **
ஆயரேற்றை அமரர் கோவை * அந்தணர் தம் அமுதத்தினை *
சாயை போலப் பாட வல்லார் தாமும் * அணுக்கர்களே (11)

**பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**